984

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்தரத் தமிழ் பத்திரிகை)

520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்.

—:o:—

"முயற்சி திருவினை யாக்கும்"

CONNEMARA PUBLIC LIBRARY
18 JAN 1956
MADRAS

தொகுதி 19 | ஜய ஹூ ஆனி மீ 1954 ஜூன் | பகுதி 3

14 SEP 1954
MADRAS

## பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வாசிப்பும் கண்வீச்சும் — V. நடராஜன் | ... 33 |
| 2. | கணக்கு: கற்பித்தல் — T. S. ராஜகோபாலன் | ... 39 |
| 3. | ஆசிரியர் சாசனம் | ... 43 |
| 4. | செய்தித் திரட்டு | ... 46 |

———

MEMBERS OF THE JOURNAL COMMITTEE

Sri S. NATARAJAN
„ R. KRISHNAMURTHY
„ K. KURUVILA JACOB
„ T. P. SRINIVASAVARADAN
„ P. DORAIKANNU MUDALIAR
„ V. NATARAJAN
„ V. ARUNAJATAI
„ L. MARIAPRAGASAM

Sri S. MARIA JOSEPH
„ J. VAIDYANATHAN
„ J. BALASUBRAMANIAM
„ G. SRINIVASACHARI
„ C. RANGANATHA AIYENGAR, *Secretary*
„ V. B. MURTHI, *Asst. Secretary.*

உள் நாடு: வருஷ சந்தா ரூ. 2—0—0    தனிப் பிரதி ரூ. 0—4—0

# பாலர் கல்வி

| தொகுதி 19 | ஜய ஷூ ஆனி மீ<br>1954 ஜூன் | பகுதி 3 |
|---|---|---|


## வாசிப்பும் கண்வீச்சும்


(V. நடராஜன்)

பாலர்களுக்கு வாசிப்புப் பயிற்சி தரும்போது அவர்களது கண்வீச்சு அமைவதை கவனிக்கவேண்டும். நன்ருகப் படிப்பவன் கண்களை வீச்சுவதை கவனிப்போம். ஒழுங்காக ஒரே சீரான வேகத்தில் வரிவழியே எழுத்துக்களைத் தொடர்ந்து அவன் கண்கள் செல்வதில்லை, ஒருவிதமாகக் குதித்துச் செல்வது விளங்கும். இடையிடையே நிறுத்தல்களும் ஏற்படும். நல்ல வாசிப்பில் நீண்ட குதித்தலும் குறுகிய நிறுத்தலும் காண்போம். மட்ட வாசிப்பில் குறுகிய குதித்தலும் நீண்ட நிறுத்தலும் இருக்கும். ஒரு தடவை கண் குதிப்பில் அதிகச் சொற்களை ஏற்று அறிந்துகொள்ளும் பழக்கமே பயிற்சி செய்யவேண்டும். நிறுத்தல்கள் அடிக்கடி ஏற்படாமலும் ஒவ்வொரு நிறுத்தலும் அதிநேரம் இல்லாமலும் பழக்கப்படுத்த வேண்டும். சில சமயம் கண்ணேட்டம் பிற்போக்காகச் செல்லும். அதாவது கண்கள் ஒரு முறை பார்த்தவுடன் சொல் விளங்காமலும் கருத்துப் புரியாமலும் இருப்பதால் பிற்போக்கு உண்டாகிறது. பிற்போக்கு வாராமல் கவனிப்பதே பயிற்சியில் முக்கியமானது. எழுத்துக் கூட்டியும் கை விரலால் காட்டிக்கொண்டும் படிப்பதால் கண்வீச்சு குறுகும். குறுகிய கண்குதிப்பில் சொற்கள் கொள்வதும் குறையும், நிறுத்தல்களும் அதிகமாகும். சொற்களின் கருத்துக்கள் மனதில் விளங்குவதும் தாமதமாகிறது. கண்களின் பிற்போக்கும் அடிக்கடி உண்டாகும். இந்த நிலையில் வாசிப்பு வேகம் குறைந்துவிடுகிறது.

வாசிப்புத் தொடக்கத்தில் ஓர் ஓர் எழுத்தாகவே கண்ணேட்டம் விழுகிறது எனினும் கருத்துக்கோடல் சொற்களினுல்தான் உண்டாகிறது. கருத்துக் கொள்வதை முக்கியமென வற்புறுத்திப் பயிற்சி தரும்போது எழுத்துக் கூட்டிப் படிக்கும் நிலையை வெகுசீக்கிரம் கடந்து ஒரே கண்வீச்சில் இரண்டு அல்லது மூன்று சொற்களை ஏற்றுக் கருத்துக்கிரகிக்கும் வன்மை ஏற்படும். ஒரு சொற்ருெடரின் கருத்து மனத்தில் கிரகித்தவுடன் அடுத்திருக்கும் சொற்ருெடர் அமைப்பைக் கண்கள் கவனிக்கவும் மனம் துரிதமாக ஊகிப்பதுடன் சங்கிலிக் கோர்வைபோலக் கருத்துக்கள் மனதில் பதியும். மேற்கொண்டு வாசிப்பதும் துரிதமாகிறது. பயிற்சி காலத்தில் இவ்விதம் துரித ஊகமும் சொற்கள் வாக்கிய அமைப்பில் இடம்பெற்றுள்ள பாங்கும் பழக்கமாகிறது.

வாசிப்புப் பயிற்சிக்கு உதவியான சில வழிகளை விளக்குமுன், கண்வீச்சுப் பயிற்சியைப்பற்றி முதலில் இக்கட்டுரையில் விளக்குவோம். சொற்களைப் படிக்கும் திறமை வந்தவுடன் இப்பயிற்சியை அனுசரிக்கவேண்டும். அதாவது முதல் வகுப்பில் இரண்டு அல்லது ஒரு மாதம் சொற்கள் படிக்கப் பழகியவுடனே பயிற்சி தொடங்கலாம். கண்ணின் ஒரு பார்வையில் எவ்வளவு சொற்களைக் கிரகிக்க முடியும் என்று கவனித்து, இன்னும் அதிகம் கிரகிக்கப் பழக்குவதே

யாம். சில ஆண்டுகளுக்கு முன் நான் அனுசரித்த வழியை இங்கு விவரிக்கிறேன். சொற்கள் படிக்கத் தொடங்குமுன்னரே சிறு படங்கள் உள்ள கார்டுகள் உபயோகிக்கப்பட்டன. நான்கு அங்குல சதுரக் கார்டில் ஒரு அங்குல அளவுப் படங்கள்.



முதல் வகுப்புப் பிள்ளைகளுக்கு (6 வயது) முன் இந்தக் கார்டை அரை நிமிஷநேரம் காட்டிவிட்டு கார்டை எடுத்துவிடுவது. பிறகு பாலன் (பாலிகை) பார்த்த படங்களைச் சொல்வது. இவ்விதம் நான்கு நான்கு படங்கள் கொண்ட 10 வகைக் கார்டுகளை உபயோகித்த பிறகு தெரிந்த அனுபவம். இச்சோதனையில் 100க்கு 80 பேர் விடைகள் சரி. பிறகு ½ நிமிஷத்தை கால் நிமிஷமாக்கிச் சோதனை. படங்களை ஐந்து ஆறு முறை பார்த்துப் பழக்கமான பிறகு ஒரு கார்டைப் பார்த்தவுடனேயே சட்டென்று நான்கு படங்களையும் பாலர்கள் சொல்லத் தொடங்கினர்.

பிறகு சொற்கள் கொண்ட கார்டுகள் உபயோகம். படங்கள் இல்லாமல் சொற்களைப் படிக்கும் பயிற்சி வந்தபிறகு இக்கார்டுகளை உபயோகிப்பது.

**பந்து மரம்**

**லட்டு ரயில்**

கார்டு $5 \times 2\frac{1}{2}$ அங். அளவு. ஒரு அங்குல நீளம் அரை அங்குல உயர அளவில் சொற்கள். இரண்டு எழுத்து சொற்களாயின் ஒரு அங்குல நீளம், மூன்று ஆயின் $1\frac{1}{2}$ அங். நீளம். முதலில் கார்டை ஒரு நிமிஷ நேரம் காட்டிவிட்டு மறைத்துக்கொண்டு சொற்களைச் சொல்லக் கேட்பது. பெரும்பான்மையோர் சுலபமாகச் சொல்லிவிட்டார்கள். ஒரு நிமிஷத்தைக் குறைத்து அரை நிமிஷமாக்கிவிடுவது.

புதுச்சொற்கள் கொண்ட அதே அளவுக் கார்டுகள் உபயோகம். ஆனால் இப்போது எழுத்துக்கள் பரிமாணம் அளவில் குறைந்துவிடும். கால் அங்குல உயரத்தில் எழுத்துக்கள் இருக்கும். 3 அல்லது 4 எழுத்துக் கொண்ட சொற்களும் உண்டு. தினமும் 5 நிமிஷ நேரம் சோதனை செய்வதை விளையாட்டுப்போல பாலர்கள் உற்சாகமாக அனுபவித்தார்கள். ஒரு வாரத்திற்குப் பிறகு கார்டுகள் காட்டப்படும் நேரம் குறைக்கப்பட்டு சோதனை. கடைசியில் கண்ணிமைப் பொழுது நேரமே கார்டுகளைக் காட்டுவது. அதாவது கார்டைக் காட்டிக்கொண்டு, மனதில் 1, 2, 3 என்று எண்ணியவுடன் கார்டை மறைத்துவிடுவது. இந்தச் சோதனை சாதாரணமாக வருஷ முடிவில் செய்வது. கண்ணிமைப்பொழுதில் இரண்டு மூன்று சொற்களைக் கொள்ளும் திறமை சாதாரணமாக வந்துவிட்டது.

கண்வீச்சு நீட்டும் பயிற்சியுடன் கண்ணோட்டத்தின் உயரத்தையும் கவனித்து சோதனை செய்வது. ஒரு வரியில் உள்ள சொல்லைக் கிரகித்தவுடன் அடுத்த வரியில் உள்ள சொல்லையும் அதே பார்வையில் கவனிப்பது. மூன்று எழுத்துச் சொற்கள் ஒன்றன் கீழ் ஒன்றாக ஐந்து சொற்கள் கொண்ட கார்டுகள் உபயோகம். ஒரு நிமிஷ நேரம் காட்டுவது. பிறகு அரை நிமிஷ நேரம் காட்டுவது. ஆனால் கண்ணிமைப் பொழுதில் மூன்று வரிகளில் உள்ள சொற்களை அறிவது மிகவும் சிரமம் என்பது விளங்கியது. கண்ணிமைப் பொழுதில் வீச்சு விசாலம் (horizontal) பயிற்சியில் அதிகமாக்குவது போல, உயரம் (vertical) அதிகமாக்குவது எளிது அல்ல. கண்ணோட்டமும் பாதிக்கப்படலாம். பயிற்சியில் வீச்சு விசாலத்தையே முக்கியமாகக் கொள்ளவேண்டும். சொற்கள் ஒருவரியாக வாசித்துவிட்டு அடுத்த வரிக்குக் கண் பார்வையைத் திருப்ப வேண்டும். தமிழில் எழுதுவதும் அச்சிடுவதும் இப்படி நேராகவே வரிகளில் இருப்பதால் இந்தப் பயிற்சிதான் அதிகம் தேவை. சீன பாஷையில் சொற்களை உயரவிருந்து தாழ்த்து வாசிக்கிறார்கள். உருது பாஷையில் வலப்புறம் தொடங்கி இடப்புறம் வாசிப்பது. ஆனால் தமிழ் வாசிப்பது இடப்புறமிருந்து வலப்புறம் செல்வது. ஆகவே, நாம் திட்டமிடும் பயிற்சியில் கண் வீச்சு விசாலம் (horizontal) பெருகி ஒரு பார்வையில் அதிக சொற்கள் கொள்ளும் பழக்கம் தருவது முக்கியமாகும்.

இந்தப் பயிற்சியின் தொடர்பாகவே கண் வீச்சை ஒரு வரியில் அதிக சொற்களைக் கொள்ளுவது பழக்கப் படுத்துவதுபோலவே, கண்ணோட்டத்தை மேலிருந்து கீழேயும் துரிதமாகச் செலுத்தி சொற்களைப் படிக்கும் பயிற்சியும் தர வேண்டும். இப்பயிற்சியில் சொற்களைப் படித்து அறிந்து கொள்வதுடன் நினைவு கொள்வதும் பழக்கமாகும். மூன்று எழுத்துச் சொற்கள் ஒன்றன்கீழ் ஒன்று ஐந்து சொற்களை அரை நிமிஷம் பார்த்துவிட்டு, அச்சொற்களைச் சொல்வது, பார்க்கும்போதே உரத்துப் படிப்பது முதல் பயிற்சி. பிறகு உரத்துப் படிக்காமல் மனதிற்குள் படித்துவிட்டு, கார்டை மறைத்தவுடன் சொற்களைச் சொல்வது இரண்டாவது படி.

பிறகு 8 சொற்கள், 10 சொற்கள் கொண்ட கார்டுகள் உபயோகம். ஒவ்வொரு கார்டையும் ஒரு நிமிஷம் பார்த்து மனதிற்குள் படித்துக் கொள்ளவேண்டும். கார்டை மறைத்தவுடன், சொற்களைச் சொல்வது. என்னுடைய சோதனையில் முதல் வகுப்புப் பிள்ளைகளில் சிலர் ஒரு நிமிஷம் பார்த்துப் படித்த பிறகு கார்டில் இருந்த பத்து சொற்களையும் சொல்லிவிட்டனர். இது மிகவும் வியக்கத் தக்கது. 100க்குச் சுமார் 15 பாலர்களிடம் இந்தத் திறமை காணப்பட்டது. ஆனால் இந்தத் திறமையை வலிமைப்படுத்திப் பெருக்கி நீடித்திருக்கும்படி செய்ய நமது பள்ளிகளில் எவ்விதம் பயிற்சி தருகிறோம் என்பதை நாம் கவனிக்க வேண்டும். சிலரிடம் தான் இந்தத் திறமை உண்டென்று கருத வேண்டாம். பயிற்சியில் பாலர்கள் திறமை வெளிப்படும். அதிகம் அதிகம் வியப்புத் தரும் வண்ணம் அவர்

கள் திறமையை நாம் காண முடியும். அவர்களிடம் உள்ள இயல்புத் திறமையை நன்றாகப் பயன்படும்படி படிப்புப் பயிற்சி முறைகளை ஆசிரியர்கள் அனுசரிக்க வேண்டியது அவசியம்.

உரத்து வாசிப்பது, துரித வாசிப்பு, மெள்ள வாசிப்பு முதலிய அம்சங்களைப்பற்றி அடுத்த இதழில் விரிவாக எழுதுவோம்.

A.

**1**

| | |
|---|---|
| பந்து | ஊதல் |
| லட்டு | சாவி |
| பாய் | ஆணி |

**2**

| | |
|---|---|
| சீப்பு | உரல் |
| பூட்டு | மரம் |
| ஏணி | பூனை |

B.

**1**

யானை வால்
பலூன் ஊது
பால் குடி

**2**

லட்டு தின்னு
படம் எழுது
பந்து ஆடு

**3**

ரயில் வண்டி
கோழி முட்டை
பம்பரம் விடு

**4**

பட்டம் விடு
ரூபாய் கொடு
தீபம் ஏற்று

**5**

மான் கொம்பு
எருமை மாடு
கறுப்புப் பூனை

**6**

குதிரைக் குட்டி
கோழிக் குஞ்சு
சிவப்புச் சட்டை

அ. (5 சொற்கள்)

| 1 | 2 | 3 |
|---|---|---|
| நாய் | கால் | ரயில் |
| எலி | லட்டு | கோழி |
| பூனை | ஏணி | பாலம் |
| பால் | மயில் | கரடி |
| பந்து | மரம் | குடை |

ஆ. (8 சொற்கள்)


| 1 | 2 | 3 |
|---|---|---|
| பம்பரம் | குரங்கு | தேங்காய் |
| தோசை | கொக்கு | பலாப்பழம் |
| ஊஞ்சல் | சிங்கம் | மாம்பழம் |
| சுண்டல் | காக்கா | பூசனிக்காய் |
| கரும்பு | குதிரை | புளியங்காய் |
| சன்னல் | சேவல் | வாழைப்பழம் |
| ரொட்டி | மைனா | புடலங்காய் |
| கண்ணாடி | ஒட்டகம் | நார்த்தம்பழம் |

இ. (10 சொற்கள்)


| 1 | 2 | 3 |
|---|---|---|
| பம்பரம் | தென்னை மரம் | பல் தேய் |
| மண்டபம் | மரப் பெட்டி | முகம் கழுவு |
| விளாம்பழம் | தாமரைப் பூ | உடல் குளி |
| மிட்டாய் | இரும்புச் சட்டி | பால் குடி |
| கோபுரம் | குதிரை வண்டி | தயிர் கடை |
| செங்கல் | ஊஞ்சல் பலகை | வீடு பெருக்கு |
| தயிர்வடை | எறும்புப் புற்று | பாடம் எழுது |
| மச்சு வீடு | குருவிக் கூடு | பந்து ஆடு |
| பால் கோவா | சட்டைத் துணி | கதை கேள் |
| பன நுங்கு | மாதுளம்பழம் | பாட்டுப் பாடு |


ஆசிரியருக்கு

I, II, III *படங்களைக் காபி செய்து உபயோகிக்கலாம். இதேமாதிரி கார்டுகளில் வேறு படங்கள் எழுதி உபயோகிக்கலாம்.* I*ல் மாதிரி இரண்டு வரிசைப் படங்கள் சற்று பெரிதாகவும்,* II, III *மாதிரி இரண்டு வரிசையில் மூன்று படங்கள் சிறியதாகவும் எழுதவும்.*



2





A. 1, 2. B. 1, 2, 3, 4, 5, 6.

சொற்கள் பகுதிகளை அப்படியே கத்தரித்து எடுத்துக் கார்டுகளில் ஒட்டி வைத்து உபயோகிக்கலாம். அல்லது இதே சொற்களைக் கார்டுகளில் அழகாக எழுதி உபயோகிக்கலாம். வேறு சொற்களும் எழுதிய கார்டுகளையும் தயார் செய்து கொள்ளலாம். கட்டுரையில் விவரித்த பிரகாரம் ஒரு நிமிஷம், அரை நிமிஷம், கண்ணிமைப் பொழுது என்று படிப்படியாகப் பயிற்சி தரவும். வகுப்புப் பிள்ளைகளைப் பகுதிகளாகப் பிரித்து ஒரோர் பகுதிக்கும் வெவ்வேறு வேலைகள் தரவும். ஒரு பகுதிப் பிள்ளைகளுக்கு ஆசிரியர் சொற் கார்டுகளைக் காட்டிப் படிக்கும் பயிற்சி தரும்போது மற்றப் பகுதிகள் எழுதுவது, சித்திரம் வரைவது என்று செய்து கொண்டிருக்கலாம். ஒரு பகுதியில் மாணவர்கள் தாமே கார்டைப் பார்த்து விட்டுச் சொல்லவும் சோதித்துக் கொள்ளவும் பழக்கப்படுத்துவது நல்லது.

பிறகு இச்சொற்களைக் கொண்டே இன்னொரு வகை கார்டுகள் தயார் செய்யவும். அ, ஆ, இ வரிசைக் கார்டுகளில் உள்ள சொற்களில், ஒவ்வொரு கார்டிலும் சில சொற்கள் கறுப்பு மையிலும் சில சொற்கள் சிவப்பு மையிலும் எழுதவேண்டும். பிள்ளைகள் பார்த்து எழுதும்போது ஒரு பிள்ளை சிவப்பு மையில் உள்ள சொற்களையும் அடுத்த பிள்ளை கறுப்பு மையில் உள்ள சொற்களையும் எழுத வேண்டும். பிறகு பிள்ளைகள் தாமே கார்டைப் பார்த்து சரி தப்பு சோதித்துக் கொள்ளவேண்டும்.

சிவப்பு கறுப்பு மை வித்தியாசமின்றி எல்லாச் சொற்களையும் ஒரே மையில் எழுதிய கார்டுகளை உபயோகித்து இன்னொரு பயிற்சியும் தரலாம். ஆ. 1ல் ஒரு பிள்ளை தின்னும் பண்டங்களை மாத்திரம் படிப்பது, எழுதுவது. அடுத்த பிள்ளை தின்னத்தகாத பண்டங்களை மாத்திரம். ஆ. 2ல் மிருகங்களை மாத்திரம் ஒரு பிள்ளை, பட்சிகளை மாத்திரம் அடுத்த பிள்ளை. ஆ. 3ல் காய் மாத்திரம் ஒரு பிள்ளை, பழம் மாத்திரம் அடுத்த பிள்ளை. இ. 1ல் கூட இவ்விதம் தின்னும் பண்டம் தின்னாப் பண்டம் பிரித்து எழுதச் செய்யலாம். இ. 2ல் இணைப்புச் சொற்றொடர்கள் பழக்கம், இ. 3ல் செயல் அலுவல்கள் என்றவாறு உதாரணப் பயிற்சிகள் தரப்பட்டுள.

# கணக்கு : கற்பித்தல்

## 3. முதல் வகுப்பு : இலக்கங்கள்—குறியீடு, படித்தல்

[T. S. ராஜகோபாலன், B. A., L. T.,
இந்து உயர்நிலைப்பள்ளி, திருவல்லிக்கேணி]

இதுவரையில் சிறுர்களுக்குக் கற்பித்துள்ளது, பண்டங்களை எண்ணுவதாகும்; அதாவது பண்டங்களின் இனத்தை கண்ணுல் கண்டதும், அவற்றின் எண்ணிக்கை என்னவென மனதில் வாங்கிக்கொண்டு, இந்த எண்ணிக்கையைப் பிறருக்குத் தெரிவிப்பதாகும். எண்ணிக்கையைப் பிறருக்குப் பேச்சு மூலமாகவும், எழுத்து மூலமாகவும் தெரிவிக்கலாம். எழுதித் தெரிவிக்கும்போது ஒவ்வோர் எண்ணிக்கைக்கும் ஒரு குறியீடும், அந்தக் குறியை மொழியில் பெயர்த்து சொல்வதும் அறியவேண்டும். முன் காலத்தில் குறியீடு நாட்டிற்கேற்பவும் காலத்திற் கேற்பவும் தேவைக்கேற்பவும் பலவகைப்பட்டிருந்தது. உதாரணமாக, 8 என்ற எண்ணைத் தமிழில் அ என்றும், மேனுட்டினர் VIII என்றும் குறித்தனர். இப்போதும் அதிகம் படிக்காதவர்கள் பொட்டுக்களாலும் கோடுகளாலும் எண்களைக் குறிப்பிடுகின்றனர். தயிர் விற்பவள் 8 படி என்பதைக் காட்டச் சுவரில் 8 புள்ளிகளை வைக்கிருள். ஆயினும் இப்போது உபயோகப்படும் இந்து - அராபிக் குறியீட்டு முறைப் படி பெரிய எண்களையும் சுருக்கி எழுத இயலுவதால், எழுத்து அதிக இடத்தை அடைப்பதில்லை, எழுதுவதற்கு அதிக நேரம் ஆவதுமில்லை; அன்றியும் குறியீட்டைக் கண்ணுற்றதும் அது காட்டும் எண் எளிதில் கண்ணிற்குப் புலனுகிறது.

நகரத்தில் வாழும் குழந்தைகள் வீட்டின் இலக்கம், மோட்டார் காரின் இலக்கம், மோட்டார் பஸ் செல்லும் மார்க்கத்தின் இலக்கம் முதலியவற்றை அடிக்கடி கண்களால் கண்டு, வாய்விட்டுச் சொல்லிப் பழகுவதால், இவர்கள் கிராமங்களில் வாழும் சிறுர்களைவிட எண்களைக் குறிப்பதிலும் படிப்பதிலும் அதிக ஆற்றல் வாய்ந்தவர்கள் என்பதில் சற்றேனும் ஐயமில்லை.

எண்களை எழுதக் கற்பிப்பதற்குமுன், ஒன்று முதல் பத்து வரையில் சிறுர்கள் எண்ணக் கற்றுக் கொண்டனரா என்பதையும், பண்டங்களின் எண்ணிக்கையைப் பண்டங்களைப் பார்த்தவுடனே மனதில் ஏற்றுக்கொள்கிருர்களா என்பதையும் சோதனை செய்வது அவசியமாகும்.


### குறியீடு—படித்தல்

முதன் முதலில் சிறுர்கள் கற்கவேண்டுவது, எண்களின் குறியீட்டைப் பார்த்ததும், குறியீடு எந்த எண்ணைக் குறிக்கும் என்று மனதில் ஏற்றுக்கொள்வதாகும். முதலில் கற்பிக்கவேண்டுவது 1, 2, 3, ......, 9 என்பன; பின்புதான் 0, 10—இவை கற்பிக்கப்பட வேண்டும்.

இக் குறியீடுகளை ஒருங்கே கற்பிக்காமல், ஒவ்வொன்ருகக் கற்பிக்க வேண்டும். முதலில் ஒரு கை, ஒரு தலை, ஒரு விரல், ஒரு பொட்டு,......என்று சிறுர்களைச் சொல்லச் செய்து, இவற்றிற்கெல்லாம் பொதுவான ஒன்று என்பதை 1 என்று குறிக்கவேண்டும். இவ்வாறு 9 வரையில் குறியீடுகளைப் போதித்து, பின்னர் 0, 10—இவற்றையும் படிக்கக் கற்பிக்கவேண்டும்.


இந்தக் குறியீடுகளும் இவை குறிக்கும் எண்களும் மனதில் பதிவதற்காக, சித்திரங்கள் அடங்கிய அட்டைகள் ஒவ்வொரு வகுப்பறையிலும் அவசியம்

வேண்டும். ஆராய்ச்சியாளர்கள் புள்ளிகள் பின்வருமாறு அமைப்பது நல்லதெனக் கருதுகின்றனர்.




1 2 3 4 5 6 7 8 9 10

ஆயினும் தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர் பொட்டுவைத்துக் கோலம் போடுவதில் தனி ஆற்றல் பெற்றுள்ளதால், பின்வரும் முறைப்படி அமைப்பது மனதிற்குக் கவர்ச்சியளிக்குமென்பது என்னுடைய துணிவு.



1 2 3 4 5 6 7 8 9 10

நாம் அடிக்கடி கைவிரல்களைக் காட்டி எண்களைத் தெரிவிப்பதால், பின்வருமாறு விரல்களின் படமும் வகுப்பறையில் வேண்டும் :



1 2 3 4 5

## பயிற்சிக்கான விளையாட்டுக்கள்


(1) உபகரணங்கள் : (*a*) 1, 2, 3, ......, 10 என்ற எண்கள் தனித்தனியாக அச்சிடப்பெற்றுள்ள 10 அட்டைத் துண்டுகள், (*b*) ஒன்று, இரண்டு, மூன்று, ......, பத்து என்பன தனித்தனியாக அச்சிடப்பெற்றுள்ள 10 அட்டைத் துண்டுகள், (*c*) மேலே சொல்லியவாறு புள்ளிகளோ கை விரல்களோ 1 முதல் 10 வரையில் குறிக்குமாறு பட விளக்கங்கள்.

முதலாவதாக, (*a*)-ல் விவரித்துள்ள அட்டைத் துண்டுகளை 1 முதல் 10 வரையில் வரிசையாக அமைக்காமல், வேண்டியவாறு மாற்றி மாற்றி வைத்து, ஒவ்வொரு குறியீட்டையும் படிக்கச் செய்யலாம்.

இரண்டாவதாக, (*b*)-ல் விவரித்துள்ள அட்டைத் துண்டுகளை மாற்றி மாற்றி அமைத்து, ஒவ்வொரு பதத்தின் கீழும் சரியான எண்ணை அமைக்கச் செய்யலாம். உதாரணமாக, ஆறு என்பதன்கீழ் 6 என்ற அட்டையை வைக்கச் செய்யவேண்டும்.

மூன்றாவதாக, (*c*)-ல் சொல்லியவாறு பொட்டுக்களையாவது விரல்களைக் காட்டும் சித்திரங்களையாவது மாற்றி அமைத்து, கீழ்வரிசையில் 1, 2, 3,......, 10 என்ற எண்களை வேறுவகையாக மாற்றி அமைத்து, இந்த எண்களை மேலுள்ள படங்களுக்கேற்பச் சரியாக இணைக்கச் செய்யலாம்.

உதாரணமாக,



7 9 5 1 8 6 3 4

என்ற அமைப்பில் 7, 9, 5, 1...என்பனவற்றை மேலுள்ள பொட்டுக்களுக்குச் சரியாக அதனதன்கீழ் அமைக்கச் செய்யலாம்.

அன்றி, மேலுள்ள பொட்டுக்களை 1, 2, 3,..., 10 என்ற வரிசையில் அமைத்து, கீழுள்ள இலக்கங்களை கலந்து வைத்து மேலுள்ள பொட்டுக்களுடன் சரியாக இணைக்கவும் செய்யலாம்.

நான்காவதாக, 1, 2, 3,..., 10 என்ற எண்கள் அடங்கிய அட்டைகளை மாற்றி மாற்றி அமைத்து, ஒவ்வொரு எண்ணையும் படிக்கும்போது கை விரல்களைக் கொண்டு இந்த எண்களைக் காட்டச் செய்யலாம்.

(2) **உபகரணங்கள் :** சோழிகள், 1, 2, 3,..., 10 என்ற எண்கள் கொண்ட அட்டைத்துண்டுகள், ஒன்று, இரண்டு, மூன்று,..., பத்து என்ற பதங்கள் அடங்கிய அட்டைத்துண்டுகள்.

கற்பிப்பவர் பத்துக் குழந்தைகளை வரிசையாக உட்காரவைத்து, அவர்களிடம் முறையே 1, 2, 3, ..., 10 சோழிகளைக் கொடுக்கவேண்டும். இரண்டாம் வரிசையில் 10 குழந்தைகளை உட்காரவைத்து, அவர்கள் கையில் முறையே 1, 2, 3, ..., 10 என்ற எண்கள் கொண்ட அட்டைத்துண்டங்களையும், மூன்றும் வரிசையில் இதேமாதிரி 10 குழந்தைகளிடம் முறையே ஒன்று, இரண்டு, மூன்று,..., பத்து என்ற பதங்கள் கொண்ட அட்டைத்துண்டங்களையும் கொடுக்கவேண்டும். பின்பு கற்பிப்பவர், "குழந்தைகளே! இப்போது 6 என்ற குடும்பம் வரும்; பாருங்கள்" என்று சொல்லியதும் முதல் வரிசையிலுள்ள ஆருவது குழந்தை தன்னிடமுள்ள ஆறு சோழிகளைக் கீழே வைக்கும்; இரண்டாவது வரிசையிலுள்ள ஆருவது குழந்தை தன்னிடமுள்ள 6 என்ற அட்டைத் துண்டைச் சோழிகளின் கீழ் வைக்கும்; மூன்ருவது வரிசையிலுள்ள குழந்தை ஆறு என்ற சீட்டை அதன் கீழ் வைக்கும். இவ்வாறு பயிற்சி பெறுவதால் எண்களில் பெயரும், வரிசைக் கிரமும், குறியீடும், குறியீட்டைப் படிப்பதும் எளிதில் ஏற்கப்படும்.

(3) **தபால் விளையாட்டு :** அறைகளையாவது பெஞ்சுகளையாவது 1, 2, 3, ..., 10 என்று இலக்கமிட்டுக் குறிக்க வேண்டும். பத்துக் கடிதங்களின்மேல் 1, 2, 3,..., 10 என்று இலக்கமிட்டு, இந்தக் கடிதங்களை மாற்றி மாற்றி அமைத்து, ஒரு குழந்தையிடம் கொடுத்து, இவற்றைச் சரியான இலக்கமுடைய அறையில் கொடுக்கச் செய்யலாம், அல்லது பெஞ்சின்மேல் வைக்கச் செய்யலாம்.

இவ்வாறு விளையாட்டுக்கள் பல உண்டு.

### குறியீடு எழுதுவது

0, 1, 2, 3,..., 10 என்ற குறியீடுகளை எழுதும் விதம் பின்பு கற்பிக்கப் படவேண்டும். இவை எல்லாவற்றையும் ஒருங்கே கற்பிக்காமல், ஒவ்வொன்றுகக் கற்பித்தல்தான் சாலச் சிறந்ததாம். இக்குறியீடுகளைப் பின்வரும் வரிசையில் எழுதச் செய்வது சிறந்ததெனத் தீர்மானத்துள்ளனர் ஆராய்ச்சி வல்லுனர் :

1 7 4 0 6 9 3 2 8 5

இக்குறியீடுகள் அச்சிலுள்ளனபோல் இருக்கக்கூடாது, கையெழுத்து முறையில் தான் கற்பிக்கப்படவேண்டும். பின்பு அச்சிலுள்ள முறையில் பழக்கம் தானே ஏற்படும்.

குழந்தைகள் இவற்றை எழுதக் கற்கும்போது பின்வருவனவற்றுள் சில உபயோகமாகும் :

(i) குறியீடுகளை மணலில் பெரியனவாக எழுதச் செய்வது. இது நம் நாட்டுப் பண்டை முறை. பெரியதாக எழுதுவதால், கையெழுத்து நன்கு படியும்.

(ii) அட்டைகளில் பெரியனவாக எழுதியுள்ள இலக்கங்களின்மேல் ஜவ்வுத்தாளை அமைத்து, அந்தத் தாளின்மேல் பென்சிலால் அந்த அந்த இலக்கத்தை எழுதுவது.

(iii) அட்டையில் அரைகுறையாக எழுதிவைத்துள்ள இலக்கங்களைச் சரியாகப் பூர்த்தி செய்வது.

(iv) ஸ்டென்சில்களைக்கொண்டு காகிதத்தில் இலக்கங்களை எழுதுவது.

(v) மான்டிஸோரி முறை : நன்றாக இழைத்த மரக்கட்டைகளின்மேல் உப்புத்தாளிலிருந்து வெட்டியுள்ள இலக்கங்களை ஒட்டிவைத்திருக்கும். இந்த இலக்கங்களைக் கண்ணால் கண்டும், கையால் தடவிப்பார்த்தும் எழுதும் முறையைக் கற்கலாம்.

(vi) இலக்கங்களைப் பார்த்துக் காகிதத்தில் எழுதுவது. இது இக்காலத்தில் யாவரும் உபயோகிப்பதாகும்.

இவ்வாறு எழுதப் பழகும்போது, இலக்கங்களைப் பெரியனவாக எழுதச் செய்யவேண்டும் ; சித்திரங்கள் வரைவதுபோல் இவற்றை அடிக்கடி கரும் பலகையில் (Black Board) வரைந்து எழுதும் வகையைக் கற்பிப்பவர் காட்டவேண்டும். 3, 4 முதலிய இலக்கங்களைச் சிறுர்கள் ℇ, ₮ என்று மாற்றியும் எழுதிவிடுவார்கள் ; இவ்வாறு பிழை நிகழாவண்ணமும் பார்த்துக்கொள்ளுவது கற்பிப்போருடைய பொறுப்பாகும்.

## ஆற்றலைச் சோதிப்பதற்கான பயிற்சிகள்

(1) குழந்தைகள் பண்டங்களை உரக்க (வாய்விட்டு) எண்ணி, இலக்கத்தைப் பலகையில் (Black Board) எழுதவேண்டும்.

(2) அட்டைகளில் ஒட்டியுள்ள படங்களில் ஒவ்வொன்றின் கீழும், படங் காட்டும் எண்ணிக்கையை இலக்கமாக எழுதலாம்.

(3) புத்தகங்களின் பக்கங்களில் எண்ணிக்கையை 10 வரையில் படிக்கச் செய்யலாம் ; மேலுள்ள எண்களில் சிற்றிலக்கங்களைத் தனித் தனியாகப் படிக்கவும் செய்யலாம்.

(4) ஆசிரியர் இலக்கங்களைச் சொல்லும்போது (Dictation) அவற்றைக் குழந்தைகள் தங்களது சிலேட்டுப் பலகையில் எழுதலாம்.

## விளையாட்டுக்கள்

(1) **Basket-ball :** ஒவ்வொரு குழந்தையையும் 10 தரம் பந்தை எறியச்சொல்லவேண்டும். எத்தனை தரம் பந்து வலையில் விழுகிறது என்பதை அவரவர்கள் இலக்கத்தில் குறித்துக்கொள்ள வேண்டும்.

(2) பாண்டி ஆடுவது, சோழி ஆடுவது முதலியன குழந்தைகளுக்கு எண்ணுவதற்கு வேண்டிய பயிற்சியை அளிக்கும். இந்த ஆட்டங்களில் கிடைக்கும் பாயிண்டுகளை இலக்கங்களாகக் குறித்துக்கொள்ளச் செய்யலாம்.

# ஆசிரியர் சாசனம்

## முகவுரை

அகில இந்திய ஆசிரியர் சமாஜத்தின் கொள்கை, இந்தியாவின் எந்த பாகத்திலுமுள்ள எல்லாவித—பிரைமரி, செக்கண்டரி, உயர்தர, ஸ்பெஷல்—ஆசிரியர்களின் நன்மைகளைப் பாதுகாப்பதும், அவர்களுக்கு 'நாட்டில் உரிமையான ஸ்தானத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டும், என இருப்பதாலும்,

இந்த கொள்கையை, பொது ஜனங்களும் சர்க்காரும் சேர்ந்து ஆசிரியர்களுக்கு சில முக்கியமான உரிமைகளையும் பொறுப்புக்களையும் அளித்தாலன்றி, அடைய முடியாததாயிருப்பதாலும்,

இங்கு குறிப்பிட்டுள்ள உரிமைகளும் பொறுப்புக்களும் ஆசிரியர்களுக்குத் தேவை என்றும், அவைகளை சமாதான முறைகளினால் அடைய முயற்சிப்பதை முதல் கடமையாகக் கொண்டிருப்பதாகவும், அகில இந்திய ஆசிரியர் சம்மேளனம் உறுதி கூறுகிறது.

### உரிமைகள்

1. ஒவ்வொரு ஆசிரியரும் தேசத் தொண்டர் என்பதை பொது மக்களும் சர்க்காரும் உணரவேண்டும்.

2. ஒவ்வொரு ஆசிரியரும் நியாயமான ஜீவனம் நடத்தப் போதுமான ஊதியம் பெறவேண்டும்.

3. ஒவ்வொரு உபாத்தியாயருக்கும் தங்கள் உத்தியோகத்தில் ஸ்திரமாயிருக்க உரிமையுண்டு.

4. ஒவ்வொரு உபாத்தியாயருக்கும் தங்களுடைய வியாதியிலிருந்தும், ஆபத்துக்களிலிருந்தும், வயது முதிர்ந்த காலத்தில் காப்பாற்றப்படவும் உரிமை உண்டு.

5. ஒவ்வொரு ஆசிரியரும், ஜாதி, மதம் முதலிய வித்தியாசமில்லாமல், சம்பளம், உத்தியோக உயர்வு விஷயங்களில் சமதிருஷ்டியோடு நடத்தப்பட உரிமை உண்டு.

6. ஆசிரியர்களுக்கு, தங்கள் உபயோகத்தில் மேன்மையடையவேண்டி நியாயமான முறையில் சங்கங்களில் சேரவும், தங்களுடைய அபிப்பிராயங்களை சுயேச்சையாக வெளியிட்டுப் பேசவும் உரிமை இருக்கவேண்டும்.

7. ஒவ்வொரு ஆசிரியருக்கும், கல்வி, சமூகம், தேசீயம் சம்பந்தப்பட்ட நியாயமான பொதுக் காரியங்களில் ஈடுபட உரிமையுண்டு.

8. ஒவ்வொரு ஆசிரியருக்கும், தங்கள் முக்கியமான கடமைகளுக்கு விரோதமில்லாமலும், தங்கள் கவுரவத்திற்கு உகந்தவாறும், ஓய்வு நேரங்களில் வேறு சில தொழில்கள் மூலம் அதிக வருமானம் சம்பாதிக்க உரிமையுண்டு.

9. ஒவ்வொரு ஆசிரியரும், தங்கள் வேலையை மிகத் திறம்படச் செய்ய வேண்டி பயிற்சியளிக்கப்பட உரிமையுண்டு.

10. ஒவ்வொரு ஆசிரியருக்கும், கல்வி சம்பந்தமாகவும், தங்கள் யோக்யதாம்சங்களை அபிவிருத்தி செய்துகொள்ளவும், வேண்டிய பிரயாண வசதிகள் அளிக்கப்படவேண்டும்.

11. கல்வி சம்பந்தப்பட்ட கொள்கைகளை உருவாக்கவும், எல்லாவித பாடசாலைகளின் நிர்வாகத் துறையில்—சர்க்கார் பாடசாலைகள், பிரைவேட் பாடசாலைகள், யூனிவெர்ஸிட்டி பாடசாலைகள்—தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை அனுப்ப ஆசிரியர்களுக்கு உரிமை அளிக்கப்படவேண்டும்; அப்படிப்பட்ட உரிமையைச் சட்ட மூலமாகவாவது அல்லது வேறு எந்த முறையிலாவது கிடைக்கும்படி செய்ய வேண்டியது சர்க்காரின் கடமையாகும்.

12. (*a*) ஒவ்வொரு ஆசிரியருக்கும், தங்களுடைய கிரேடு தாழ்த்தப்படல், வேலையிலிருந்து நீக்கம், உத்தியோக உயர்வில் பாரபட்சம், அல்லது ஆள்

குறைப்பு முதலிய விஷயங்களில், முதலாளியையும் தொழிலாளியையும் கட்டுப்படுத்தும் தீர்மானமான தீர்ப்பை அளிக்கக்கூடிய பாரபட்சமில்லாத நியாய சபை ஒன்றுக்கு அப்பீல் செய்துகொள்ள உரிமையுண்டு; அப்படிப்பட்ட நியாய சபையை சட்டபூர்வமாக நிறுவவேண்டியது சர்க்காரின் கடமையாகும்.

(*b*) உள்ளூர் அல்லது மாகாண அல்லது தேசிய சம்பந்தமான குழப்பம் ஏற்படும் காலங்களில், இவர்கள் தங்களை சம்பந்தப்படுத்திக்கொள்ளாமலிருந்தார்களேயானால், ஆசிரியரும் பாடசாலையும் உபத்திரவப் படுத்தப்படாமலிருக்க வேண்டும்.

## பொறுப்புக்கள்

1. ஒவ்வொரு ஆசிரியரும், பள்ளிக்கூடத்தில் வகுக்கப்பட்ட பாடதிட்டப்படி, தங்களிடம் ஒப்புவிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உண்மையான முறையில் பாடம் சொல்லிக்கொடுப்பது தவிர, அவர்கள் உடலுறுதியுள்ளவர்களாகவும், மனச்சுத்தமுள்ளவர்களாகவும், உயர்ந்த நோக்கம் கொண்டவர்களாகவும், அச்சமில்லாதவர்களாகவும், தாங்களாகவே தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கும் ஆற்றலுள்ளவர்களாகவும் ஆகுமாறு அவர்களுக்குப் போதிக்கவேண்டும்.

2. ஒவ்வொரு ஆசிரியரும், ஒவ்வொரு மாணுக்கனும் சமூக வாழ்க்கைக்குத் தக்கபடி திருந்தக் கூடியவர்கள் எனக்கருதி அவர்களை சமூகத் தொண்டில் ஈடுபடும்படியான வகையில் சீர்திருத்திக் கொடுக்கவேண்டும்.

3. ஒவ்வொரு ஆசிரியரும், தான் போதிக்கும் உத்தமக் கொள்கைகளுக்கும், தான் தினந்தோறும் தன் மாணவர்களுக்கெதிரில் நடந்துகொள்ளும் தன்மைக்கும் வித்தியாசமில்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

4. ஒவ்வொரு ஆசிரியரும், தற்கால சமூகத்தில் ஒருவருக்கொருவர் போட்டியிடும் தன்மையைக் கண்டிப்பதோடு, சிறுவர்கள் மனதில் கூட்டுறவு, சமூக சேவை முதலியவற்றின் முறைகளைப் புகுத்துவதற்கு நல்ல முயற்சி செய்ய வேண்டும்.

5. ஒவ்வொரு ஆசிரியரும், ஜாதி, நிறம் முதலிய வேற்றுமை பாராட்டாமல், எல்லா ஜாதியாரிடத்திலும், ஒற்றுமையோடும், சகோதரபாவத்தோடும் நடந்துகொள்ளும் தன்மையில் தேசத்துச் சிறுவர்களை பயிற்றுவிக்கும் கடமையை முதலாவதாகக் கொள்ளவேண்டும்.

6. ஒவ்வொரு ஆசிரியரும், தொழிலின் பெருமையை மேற்கொண்டவர்களாகவும், அதை வாழ்க்கையில் நடத்திக் காட்டுபவர்களாகவும் இருப்பதோடு, தங்கள் மாணவர்களையும் அதேமாதிரி பயிலுவிக்கவும் வேண்டும்.

7. ஒவ்வொரு ஆசிரியரும், தேசத் தொண்டரின் உத்தம குணங்களுடையவராகவும், தங்கள் ஆசிரியத் தொழிலில் பாரபட்சமில்லாமல் சமமான நோக்கங்கள் கொண்டவராகவும் இருக்க வேண்டும்.

8. ஒவ்வொரு ஆசிரியரும், யுத்த மனப்பான்மையற்றவராகவும், உலகநேசப் பான்மை கொண்டவராகவும் இருக்க வேண்டும்.

9. ஒவ்வொரு ஆசிரியரும், தன் வாழ்நாள் பூராவும் கற்கவேண்டியவராகவும், தன் உத்தியோகத்திற்கு வேண்டியவற்றை மேல்மேலும் விருத்தி செய்துகொண்டும், எல்லா விதத்திலும் தன்னை மேன்மைப் படுத்தும்படியான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வேண்டிய அறிவை சேகரித்துக் கொள்ளவும் வேண்டும்.

10. ஒவ்வொரு ஆசிரியரும், மனித வர்க்கத்தின் உயர்விலும் சுயேச்சையிலும் சிரத்தையுள்ளவராயும், நியாயமான சமாதான முறையில் தாழ்த்தப்பட்டவரையும் குழந்தைகளையும் மேன்மைப்படுத்த ஊக்கங்கொண்டவராயும் இருக்கவேண்டும்.

11. ஒவ்வொரு ஆசிரியரும் தன் எண்ணங்களை சுயேச்சையாக வெளியிடுவதற்கு உரிமை கொள்வதோடு பிறருக்கும் அவ்வுரிமையை அளிக்க வேண்டும்.

12. ஒவ்வொரு ஆசிரியரும் நம் தேசத்தில் கலந்துள்ள பல நாட்டு உத்

தமப் பண்புகளை பாராட்டி வளர்ப்ப தோடு, அவைகளிலிருந்து புதுவிதப் பண்புகளை ஆராய்ந்தெடுத்து, நம் தேசத்

திற்கும் பொதுவாக மனித வர்க்கத்திற் கும் உபதேசிக்க வேண்டும்.

## ஒவ்வொரு ஆசிரியரும் செய்துகொள்ள வேண்டிய சபதம்

நான்,………………ஆசிரியர், ……………பள்ளிக்கூடம், இதனால் உறுதி கூறுவது என்னவென்றால், இந்த ஆசிரியர் சாஸனத்தில் குறிப்பிட்ட பொறுப்புக்களை ஒப்புக்கொள்வதோடு, அதில் குறிப்பிட்ட உரிமைகளை அடைவதற்கும் பாடுபடுவேனாக.

இடம்………

(ஒப்பம்)………………

தேதி………

**ஆரம்ப பாடசாலைக்குரிய எமது பாட புத்தகங்கள்**

**நமது தாய்மொழி வாசகம்**

ஆசிரியர் N. பரமசிவ அய்யர், பி. ஏ., எல். டி.

| | | | அ. | பை |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | (முதல் வகுப்பு) | …. | 4 | 0 |
| இரண்டாம் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) | …. | 5 | 0 |
| மூன்றும் புத்தகம் | (மூன்றும் வகுப்பு) | …. | 6 | 0 |
| நான்காம் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | …. | 7 | 0 |
| ஐந்தாம் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | …. | 7 | 6 |

எமது புதிய கணக்குப் புத்தகங்கள் புதிய பாடதிட்டத்திற்கேற்ப பல புதிய நோக்கங்களுடன் எழுதப்பட்டுள்ளன.

**கிண்டர்கார்டன் தினசரிக் கணக்கு**

ஆசிரியர் S. ஜகந்நாதன்

(கிண்டர்கார்டன் உதவி ஆசிரியர், டீச்சர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை, சென்னை)

J. ராமச்சந்திரன், B. A. (HONS.) M. Ed. திருத்தியமைத்தது

| | | | | |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | (முதல் வகுப்பு) | …. | அணா | 5 |
| இரண்டாம் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) | …. | ,, | 6 |
| மூன்றும் புத்தகம் | (மூன்றும் வகுப்பு) | …. | ,, | 10 |
| நான்காம் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | …. | ,, | 13 |
| ஐந்தாம் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | …. | ,, | 14 |

**பி. ஜி. பால் & கம்பெனி, புத்தக வியாபாரிகள்**

4, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை—1

# செய்தித் திரட்டு

**(1) ஆரம்ப ஆசிரியர் சங்கம், பாளையங் கோட்டை (தென்னாற்காடு ஜில்லா)**

19-6-54ல் ஷ சங்கம் பாளையங் கோட்டை போர்டு உயர்தர ஆரம்பப் பள்ளிக் கட்டடத்தில் ஆசிரியர் ஸ்ரீ H. விஸ்வநாத அய்யர் அவர்கள் தலைமையில் கூடியது. அரந்தாங்கி R. C. M. ஹையர் எலிமெண்டரி ஸ்கூல் ஆசிரியர் ஸ்ரீ T. மரிய லூயி (T. Maria Louis) அவர்கள் அவையோரின் நெஞ்சை அள்ளும் முறையிலே மயிர்க்கூச்சலெடுத்து மெய்ம் மறந்திருக்கும்படியாக இறைவணக்கம் பாடினார். கடந்த கூட்ட நிகழ்ச்சிகளை சங்க அமைச்சர் ஸ்ரீ S. கேசவ அய்யர் வாசித்தார்.

"தேசியக் கொடியின் தத்துவம், கொடி வணக்கம் செய்யவேண்டிய முறையும் அவசியமும்" என்ற பொருள் குறித்து ஸ்ரீ E. நந்தகோபால், ஸ்ரீ T. S. வெங்கடகுருநாதய்யர், ஸ்ரீ B. கேசவ அய்யர் முதலியோர் பேசினார்கள்.

முதல் மூன்று வகுப்புகளுக்குத் "தாய் மொழி போதித்தல்" (தமிழ்) என்னும் பொருள்பற்றி ஸ்ரீ D. இராசப்பன் அவர்களும், ஸ்ரீ. கேசவ அய்யர் அவர்களும் பேசினார்கள். முதல் வகுப்பிற்கு "டேனியல் முறை"யைக் கையாளும் விதம் எங்ஙனம் என்பதைப்பற்றி ஸ்ரீ B. கேசவ அய்யர் அவர்களால் மிகவும் விஸ்தாரமாக எடுத்துரைக்கப்பட்டது.

பாளையங்கோட்டை பிர்க்கா "கிராம ஊழியர்" (Village Guide) ஸ்ரீ D. உலகநாதன் அவர்கள் "கிராம வளர்ச்சியடைய வழி முறைகள்" என்னும் பொருள்பற்றி விளக்கமாகப் பேசினார்.

திருக் குறளில் "ஊழ்" என்ற அதிகாரத்தில் ஒரே ஒரு குறளுக்கு மட்டும் ஸ்ரீ D. இராசப்பன் அவர்கள் மிகவும் அழகாக விளக்கங் கூறினார்.

தலைவர் முடிவுரையில் "ஆசிரியர்களனைவரும் ஊதியத்தைப் பெரிதெனக் கருதாது "தங்கடன் பணிசெய்து கிடப்பதே" என்பதையே சிரமேற்கொண்டு தேசப்பற்றுடனிருந்து, அகம், புறம் இரண்டும் தூய்மையுடன் விளங்கி தங்களிடம் பயிலும் இளஞ்சிறுர்களை நற்தேசத் தூண்களாக ஆக்க முயல்வார்களாக" எனக்கூறி முடித்தார்.

கடைசியாக சங்கக் காரியதரிசியவர்களால் வந்தனோபசாரங் கூறப்பெற்று "ஜன கண மன" கீதத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

**(2) ஆரம்ப ஆசிரியர் சங்கம், திரு வெண்ணெய் நல்லூர்**

19-6-54ல் மேற்படி சங்கம் தலைமை ஆசிரியர் Sri S. V. கோதண்டராமன், அக்கிராசனத்தின் கீழ் கூடிற்று. "குறள்," சங்கீதம் சொக்கலிங்க ஆசிரியரால் பாடப்பட்டது. முதியோர் கல்வி விஷயம் நேரில் படத்தின் மூலம் மழயம் பட்டு தலைமை ஆசிரியர் ஸ்ரீ C. ராஜலிங்கம் அவர்களால் விளக்கிக் காட்டப்பட்டது. உதவி காரியதரிசி ஸ்ரீ சந்தான கோபால அய்யரால் வந்தனோபசாரம் கூறப்பட்டு வாழ்த்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

**(3) ஆரம்ப ஆசிரியர் சங்கம், சிங்கம்புணரி**

26-6-54ல் உயர்திரு. ஆறு. ஆ. ராம. சொக்கலிங்கம் செட்டியார், M. L. A. அவர்கள் தலைமையில் இச்சங்கத்தின் ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. ஆண்டு அறிக்கை காரியதரிசி, திரு. S. மாசிலாமணி அவர்களால் வாசிக்கப்பட்டது. காரைக்குடி அழகப்பா கல்லூரி பொருளாதாரப் பேராசிரியர் உயர்திரு. D. செல்லப்பா M. A. அவர்களால் "தற்கால உலகமும் ஆசிரியர்களின் முன்னேற்றமும்" என்னும் பொருள் பற்றிப் பேசப்பட்டது. ஆ. தெக்கூர் விசாலாக்ஷி உயர்தர கலாசாலை உயர்திரு S. கிருஷ்ணசாமி, B.A., L.T., அவர்களால் "பெற்

ரேரும் ஆசிரியரும்" என்னும் பொருள் பற்றிப் பேசப்பட்டது. சிங்கம்புணரி பஞ்சாயத்து நிர்வாக அதிகாரி உயர்திரு. முத்திருளாண்டி அவர்களால் "ஆசிரியர் கடமை" என்னும் பொருள் பற்றிப் பேசப்பட்டது. இடையிடையே மாணவி களால் பாடல்கள், கும்மி, கோலாட்டம் முதலியவை நடைப்பெற்றன. தலைவர் முடிவுரைக்குப்பின் தலைமையாசிரியர் திரு. T. எட்வர்டு ஜேம்ஸ் வந்தனோபசாரம் கூறியபின் தேசிய கீதம் பாடக் கூட்டம் இனிது முடிந்தது.

**(4) லேபர் ஆசிரியர் யூனியன் ஜில்லா செயற் கமிட்டிக் கூட்டம், திருச்சி ஜில்லா**

27-6-54ல் முற்பகல் இக்கூட்டம் முசிரி புனித மரியாயின் ஆரம்பப் பள்ளிக் கட்டிடத்தில் ஜில்லா சங்கத் தலைவர் உயர் திரு. எஸ் அந்தோணிசாமி அவர்கள் தலைமையில் கூடியது. தலைவர் முன்னுரைக்குப்பின் ஜில்லா பொதுக்காரிய தரிசி திரு. பி. எஸ். அந்தோணிசாமி அவர்களால் சென்ற கூட்ட நடவடிக்கையும் வரவு செலவு கணக்கு விவரங்களும் வாசிக்கப்பட்டு யாவராலும் அங்கிகரிக்கப் பட்டன.

**தீர்மானங்கள்**

29-4-54ல் யூனியன் சார்பில் சென்னை ராஜ்ய ஹரிஜன் நல இலாகா டைரக்டர் அவர்களைப் பேட்டிக் கண்டதின் பயனாக என்ன அனுகூலங்கள் கிடைத்துள்ளன என்பதை யூனியன் நிர்வாகஸ்தர்கள் பரிசீலித்து ஆவன செய்யவேண்டும் என் றும், புதிதாக நியமனமாகியிருக்கும் திருச்சி ஜில்லா நல அதிகாரி அவர்களை யூனியன் சார்பில் பேட்டிக்காணுவது என்றும், இந்த யூனியனை தெ. இ. ஆ. சங்கத்துடன் இணைக்கும் விஷயமாக அடுத்த செயற் கமிட்டிக் கூட்டத்தில் விவாதித்து தீர்மானிப்பது என்றும் தீர் மானிக்கப்பட்டன.

பின்னர் இடம் கொடுத்துதவிய சங். M. அற்புதசாமி அவர்களுக்கும் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறப்பட்டு, கூட் டம் இனிது முடிவுற்றது.

---

# தென் இந்திய ஆசிரியர் சங்கம்

## 1954 ஜூன் மாதத்திய நாட்குறிப்புக்கள்

10-6-54 : பாலர் கல்வி—ஏப்ரல் 1954—பிரசுரம்.
17-6-54 : பத்திரிகைக் கமிட்டி மீட்டிங்.

---

## சந்தாதார்களுக்கு அறிக்கை

1954 ஜுன் மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள் :—

சென்னை—M. 15, 20.
வட ஆற்காடு—NA. 5, 9, 44, 47.
தென் ஆற்காடு—SA. 22, 56.
செங்கற்பட்டு—Ch. 16.
மதுரை—Md. 15, 46.
ராமனுதபுரம்—Rd. 10, 11, 56, 62.
சேலம்—S. 23, 59.
தஞ்சாவூர்—Tan. 58, 61.
திருநெல்வேலி—Tin. 14, 30, 31, 43.
வெளி நாடு—Mis. 12.

குறிப்பு :—இதுவரை சந்தா பாக்கியுள்ளவர்கள் சந்தா தொகையை ஆகஸ்டு மாத முடிவுக்குள் செலுத்திவிடும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தா பாக்கி அடுத்துவரும் இதழை வி. பி. யில் அனுப்பி வசூலிக்கப்படும்.

---


## தமிழ் உபபாட புத்தகங்கள்

### புதிய பாடதிட்டத்திற்கேற்ப எழுதியவை

**இப்புத்தகங்கள் நமது பள்ளிமாணவர், மாணவிகளின் ஆர்வத்தை ஊட்டும் விதத்தில் எழுதப்பட்டுள்ளன. பல படங்கள் உள்ளன.**

### தேச பக்த மாலை

வித்வான் எம். சண்முகம் பிள்ளை
எழுதியது
எஸ். வையாபுரிப் பிள்ளை, பி. ஏ., பி. எல்.
அவர்களின் முகவுரையுடன் கூடியது

| | அணு | | அணு |
|---|---|---|---|
| 1. மகாத்மா காந்தி | 10 | 4. கவியரசி சரோஜினி | 8 |
| 2. கவியரசர் தாகூர் | 8 | 5. தேசீய கவிமணிகள் (பாரதியார், தாகூர், சரோஜினியார்) | 12 |
| 3. தேசிய கவி பாரதியார் | 8 | | |

எம். அனந்த நாராயணன், பி. ஏ., எல். டி.
எழுதியவை

6. வீர சிவாஜி அணு 10
7. சுவாமி விவேகானந்தர் அணு 12

**பி. ஜி. பால் & கம்பெனி, புத்தக வியாபாரிகள்**
4, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை—1

Regd. No. M. 3473

THE

# S. I. T. U. PROTECTION FUND LTD.

520, HIGH ROAD, TRIPLICANE, MADRAS-5

*(Registered under the Insurance Act as a Mutual Insurance Co.)*

## Total Assets Exceed 12,00,000

**No. of Policy-holders over 4500**

Please remember that this is your own Insurance Society and that its members form, as it were, a co-operative group to enable one another mutually to make provision for their old age and their families.

There are five tables for 10, 15, 20, 25 and 30 years.

Teachers may take ONE to SIX units according to their ages.

One unit guarantees a benefit of Rs. 250/-, which goes on increasing by Rupees Five after every year of membership.

You will not find a cheaper Insurance Cover.

By taking a Policy in the Protection Fund, you strengthen the teachers' organisation and at the same time make provision for your old age and family.

For particulars write to:

THE SECRETARY.

Printed by Sri T. K. Venkatesan at The Jupiter Press, Ltd., 109-C, Mount Road, Madras-18. Edited & Published by Sri S. Natarajan for "The South India Teachers' Union" 520, High Road, Triplicane, Madras.